**திருச்சிராப்பள்ளி மாவட்ட நடுவர் மற்றும்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை:: திரு. சு.சிவராசு, இ.ஆ.ப.,**

ந.க.ஜி6/8232/2020

**நாள்: 23.04.2020**

**பொருள்:** **COVID – 19** - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - தொற்றுநோய் பரவுதலை தடுத்தல் - அனைத்துவித இறைச்சி மற்றும் மீன்கடைகள் - சில்லறை மற்றும் மொத்த விற்பனை கடைகள் செயல்பட தடை விதிப்பது - ஆணைகள் பிறப்பித்தல்

**பார்வை :** 1.அரசாணை எண்.152 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்(பி1)துறை நாள்:23.03.2020

2.அரசாணை எண். 172 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்: 25.03.2020

3. அரசாணை 193 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்:15.04.2020.

4. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆணை நக டி3/100/2020 நாள்: 17.04.2020

-000-

**ஆணை**

தமிழ்நாடு மாநிலத்தில் COVID – 19 கொரானா வைரஸ் தொற்று நோய் ஏற்படுதலை தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாடு அரசினால் பார்வை (1) முதல் (3)-இல் காணும் அரசாணைகளின்படி சில கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக பார்வை (4)-இல் காணும் ஆணையின்படி குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144-இன் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 22.04.2020 அன்றைய நிலையில் 51 நபர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. மேலும் பரவாமல் தடுத்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகிறது. மேலும், பொதுமக்கள் அத்தியாவசிய தேவையென்ற அடிப்படையில் அதிகமாக கூடுகின்ற நிலை உள்ளதாக காவல்துறையினரால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று **(COVID – 19)** ஏற்படுதலை தடுத்திடவும், பரவுதலை கட்டுப்படுத்தும் நோக்கிலும், பொதுமக்கள் நடமாட்டத்தினை குறைக்கின்ற வகையிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து விதமான சில்லறை மற்றும் மொத்த விற்பனை இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் கடைகள் **26.04.2020** ஞாயிற்றுக்கிழமை **அன்று** முற்றிலுமாக செயல்பட தடை விதித்து ஆணையிடப்படுகிறது.

Scanned with CamScanner

இதனை மீறி செயல்படும் கடைகளின் உரிமத்தினை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஆணையிடப்படுகிறது.

மேற்கண்ட தடையினை மீறி செயல்படும் கடைகளின் உரிமையாளர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்து சட்டப்படியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காவல்துறையினருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/- சு.சிவராசு,**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

/உத்தரவுப்படி/

23/4/2020.

அலுவலக மேலாளர் (குற்றவியல்)

**பெறுநர்**
சம்பந்தப்பட்ட நபர்கள்.

**நகல்:** அனைத்து வட்டாட்சியர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
**நகல்:** அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
**நகல்:** அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
**நகல்:** நகராட்சி ஆணையர், துவாக்குடி/மணப்பாறை/துறையூர்.
**நகல்:** வருவாய் கோட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி / இலால்குடி.
**நகல்:** சார் ஆட்சியர் ஸ்ரீரங்கம் / முசிறி.
**நகல்:** ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி.
**நகல்:** மாவட்ட காவல் கண்காணிப்பாளர், திருச்சிராப்பள்ளி.
**நகல்:** மாநகர காவல் ஆணையர், திருச்சிராப்பள்ளி.
**நகல்:** செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி.

Scanned with CamScanner